# தன்பாலீர்ப்புள்ள பெண்கள், தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், இருபாலீர்ப்புள்ள நபர்கள், திருநர்கள் மற்றும் இடைஇலிங்கத்தவர்கள் இலங்கையர்களை பாதிக்கும் பிரச்சனைகள் குறித்த வழிகாட்டி

Women and Media Collective
Established 1984

Norwegian Embassy
*Colombo*

## அறிமுகம்

தன்பாலீர்ப்புள்ள பெண்கள், தன்பாலீர்ப்புள்ள ஆண்கள் இருப்பாலீர்ப்புள்ள நபர்கள், திருநர்கள் மற்றும் இடைஇலிங்கத்தவர்களான இலங்கையர்கள் இன்றைய கால கட்டத்தில் சந்திக்கும் முக்கிய பிரச்சனைகள் குறித்த கண்நோக்கினை இந்த வழிகாட்டி வழங்குகின்றது.

இந்த வழிகாட்டி இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒரு வளமாக, விசேடமாக பெண்கள் மற்றும் பால்நிலைக்கான துறைசார் மேற்பார்வை குழுவின் உறுப்பினர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த ஆவணத்தை வாசிக்க, மற்றும் இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரச்சனைகளை புரிந்துகொள்ள நேரம் செலவழிப்பார்கள் எனவும், அத்துடன் இலங்கையில் LGBTI சமூகத்தினருடன் ஈடுபடும் போதும் அவர்களுக்காக பரிந்துரைகளை செய்ய எதிர்காலத்தில் இதனை பயன்படுத்துவார்கள் எனவும் நாம் எதிர்பார்க்கிறோம்.

பின்வரும் கரிசனைக்குரிய தலைப்புகளின் அடிப்படையில் இந்த வழிகாட்டி ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு தலைப்பின் கீழும் அது தொடர்பான விளக்கம், இலங்கையின் தற்போதைய நிலைமை, தொடர்புடைய உள்நாட்டு மற்றும் சர்வதேச முன்னேற்றங்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

A. தன்பாலீர்ப்புள்ள பாலியல் நடத்தையை தண்டனைக்குரிய குற்றமாக கருதுதல்
B. வெவ்வேறான பால்நிலை அடையாளங்களை கட்டுப்படுத்தல்
C. பாரபட்சமின்மைக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளில் குறைபாடு
D. பால்நிலை அங்கீகாரம்
E. சுகாதார சேவைகளை அணுகல்
F. மாற்றத்துக்காக செய்யப்படும் சிகிச்சைகள் (ஊழசளெநசளழைெ வாநசயில)

## விளக்கங்கள்

இந்த ஆவணம் இலங்கையில் உள்ள தன்பாலீர்ப்புள்ள பெண்கள் தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், இருபாலீர்ப்புடையோர், திருநர்கள் மற்றும் இடைஇலிங்கத்தவர்கள் அல்லது டுபுடீவுஜ சமூகத்தினரை குறிக்கிறது. இந்த சொற்களுக்கான பின்வரும் விளக்கங்கள், உலக சுகாதார ஸ்தாபனம் (ைர்ழு) மற்றும் அமெரிக்க மனோதத்துவ நிபுணர்களின் சங்கம் (யீயு) போன்ற நிறுவனங்களின் வழிகாட்டிகளில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன.

***பாலியல் ஈர்ப்பு*** ஒரு நபரின் உடல்ரீதியான மற்றும் காதல் ரீதியான ஈர்ப்பை குறிக்கிறது. பாலியல் ஈர்ப்பு ஒருவரின் பாலியல் நாட்டம், பாலியல் நடத்தை மற்றும் பாலியல் அடையாளத்தை உள்ளடக்கியுள்ளது.

**டுநளடியைெ** - **தன்பாலீர்ப்புள்ள பெண்கள்**: பாலியல் ரீதியாகவும் காதல் ரீதியாகவும் பெண்களின் மீது ஈர்ப்புடைய பெண்

**புயல** - **தன்பாலீர்ப்புள்ள ஆண்கள்**: பாலியல் ரீதியாகவும் காதல் ரீதியாகவும் ஆண்களின் மீது ஈர்ப்புடைய ஆண்.

**டீளைநஓரயட** - **இருபாலீர்ப்புடையோர்**: தன் பாலின் மீது மற்றும் வேறு பால்நிலையினரின் மீது ஈர்ப்புடைய ஒரு நபர்.

(இது நேரானோர் (ளுவசயபைாவ) என அழைக்கப்படுவதுடன் ஒப்பிடப்படுகிறது: பொதுவாக பாலியல் ரீதியாக மற்றும் காதல் ரீதியாக எதிர் பால்நிலையினர் மீது ஈர்ப்புள்ள நபர்கள்)

**பாலியல் அடையாளம்** ஒரு நபரின் உள்ளார்ந்த ரீதியில் ஆண், பெண் அல்லது வேறு பால்நிலையை சேர்ந்தவராக உணர்வதை குறிக்கிறது. பால்நிலை அடையாளம் ஒருவருக்கு பிறப்பில் குறிக்கப்பட்ட பாலுடன் பொருந்தியதாக அமையக்கூடும் அல்லது அவ்வாறு அமையாதிருக்கக்கூடும்.

**வுசயளெபநனௌநச திருநர்:** ஒருவருக்கு பிறப்பில் குறிக்கப்பட்ட பாலை விட அவர் உள்ளார்ந்த ரீதியில் உணரும் பால்நிலை வித்தியாசமாக இருக்கும் நபர்களை குறிக்கிறது. உதாரணமாக: திருநங்கையொருவர் தன்னை பெண்ணாக அடையாளப்படுத்திக் கொள்கிறார் எனினும் அவருக்கு பிறப்பில் குறிக்கப்பட்ட பால் ஆண் என்பதாகும். திருநம்பியொருவர் தன்னை ஆணாக அடையாளப்படுத்திக்கொள்கிறார் எனினும் அவருக்கு பிறப்பில் குறிக்கப்பட்ட பால் பெண் என்பதாகும். திருநங்கைகள் (ஆண் - பெண்), திருநம்பிகள் (பெண் - ஆண்)

**ஐவெநசளநஒ** - **இடைஇலிங்கத்தவர்:** உடல்ரீதியாக அல்லது உயிரியல் ரீதியாக ஆண் அல்லது பெண் என்பதை குறிக்கும் பொதுவான பால் பண்புகளுடன் பொருந்தாத பால் பண்புகளுடன் (பாலியல் உறுப்புக்கள், இனப்பெருக்க தொகுதி அல்லது குரோமோசோம் அமைப்புகள் உள்ளடங்களாக) பிறந்த நபர்களை குறிக்கும். இவை பிறப்பில் காணப்படலாம் அல்லது வளரும் போது வெளிப்படக்கூடும்.

(இது சிஸ்ஜெண்டருடன் ஒப்பிடப்படுகிறது: பிறப்பில் ஒருவருக்கு குறிக்கப்பட்ட பாலே அவரது உள்ளார்ந்த உணர்வு ரீதியான பாலாக காணப்படும் நபர்களை குறிக்கிறது. உதாரணமாக: சிஸ்ஜெண்டர் ஆண்கள் தம்மை ஆண்களாக அடையாளப்படுத்துகின்றனர் அத்துடன் அவர்கள் பிறந்த போது குறிக்கப்பட்ட பால் ஆண்)

## A. தன்பாலீர்ப்புள்ள பாலியல் நடத்தையை தண்டனைக்குரிய குற்றமாக கருதுதல்

**பிரச்சனை:** தன்பாலீர்ப்புள்ள பாலியல் செயற்பாடுகளை இலங்கையின் தண்டனைச் சட்டக் கோவையின் பகுதிகள் 365 மற்றும் 365யு தொடர்ச்சியாக தண்டனைக்குரிய குற்றமாக இருந்து வருகிறது

- பகுதி 365 "இயற்கை நியதிக்கு மாறாக பாலியல் உறவு" கொள்வதனை தண்டனைக்குரிய குற்றமாக்குகின்றது. இது ஒரே பாலை சேர்ந்த இருவருக்கிடையில் நடக்கும் பாலியல் உறவுக்கு மட்டுமே பொருந்தும் எனும் புரிந்துணர்வு காணப்படுகின்றது. இந்த சட்டத்தை மீறுவதற்கான தண்டனை பத்து வருடங்கள் வரையான சிறைத்தண்டனை மற்றும் அபராதம்.

- பகுதி 365A "எந்தவொரு நபருடனும் பாரதூரமான இழிசெயலை" புரிவதை தண்டனைக்குரிய குற்றமாக்குகின்றது. "பாரதூரமான இழிசெயல்" இலங்கை சட்டங்களில் விளக்கப்படாத போதிலும், அது தன்பாலீர்ப்புள்ள நபர்களிடையே பொதுவான இடங்களில் அல்லது தனிப்பட்ட அந்தரங்கத்தில் உள்ள பாலியல் நடத்தை மற்றும் காதல் உறவுகள் என்ற பொதுவான புரிந்துணர்வு காணப்படுகின்றது. இதனை மீறுவதற்கான தண்டனை இரண்டு வருடங்கள் வரையான சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம்.

- பகுதிகள் 365 மற்றும் 365A, 1883ம் ஆண்டு பிரித்தானியர்கள் அதனை அறிமுகப்படுத்தியது முதல் அது மாற்றம் இன்றி இன்று வரை இருந்து வருகின்றது. 365A அதன் தண்டனைப்பரப்பை விரிவு படுத்தும் வகையில், ஆண்கள் என்ற பதம் நபர்கள் என மாற்றி, தன்பாலீர்ப்புள்ள ஆண்களுக்கு மட்டும் பொருந்தும் வகையில் இருந்த சட்டம் அனைவருக்கும் பொருந்தும் வகையில் 1995ம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்டது.

**தற்போதைய நிலை:**

- 1948 முதல் பகுதிகள் 365 மற்றும் 365யுயின் கீழ் மிகக்குறைவான தண்டனை வழங்கல்களே நடைபெற்றுள்ள போதிலும், அவை மறைமுகமாக LGBTI நபர்களுக்கு எதிராக பாரபட்சம், துன்புறுத்தல்கள் மற்றும் வன்முறைகள் ஏற்படக் காரணமாக அமைகின்றன.

- பொலிஸ் அதிகாரிகள் இந்த சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுப்பதாக கூறி டுபுடீவுஜ நபர்களை அச்சுறுத்தி அவர்களை உடல் ரீதியாக மற்றும் பாலியல் ரீதியாக துன்புறுத்த அல்லது தாக்க அல்லது அவர்களிடம் இருந்து இலஞ்சம் பெற இந்த சட்டங்களை பயன்படுத்துகின்றனர். இந்த சட்டங்களின் இருப்பு LGBTI நபர்கள் குற்றங்களினால் பாதிக்கப்படுபவர்களாக ஆக்குவதுடன், அவர்கள் பொலிஸாரால் ஏற்படக்கூடிய பாரபட்சம், துன்புறுத்தல்மற்றும் வன்முறைக்கு அஞ்சி இந்த குற்றங்களை பொலிஸில் முறைப்பாடு செய்ய விரும்புவதில்லை

- வழமையாக டுபுடீவுஜ நபர்கள் அதிகமாக, பகுதி 365 மற்றும் 365யு யின் கீழ் கைது செய்யப்பட்டு பின்னர் அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றப்படுத்தப்படுகின்றனர் ஏனெனில் பகுதி 365 மற்றும் 365யு யின் கீழ் குற்றப்படுத்துவதற்கு அதிக காலம் செல்லக்கூடும். ஆகவே பகுதி 365 மற்றும் 365யு யின் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றப்படுத்தல்கள் குறைவாக உள்ளன, இது விரிவான சட்டங்களினால் குற்றப்படுத்தப்படும் டுபுடீவுஜ நபர்களின் எண்ணிக்கையை உள்ளடக்கவில்லை.

- LGBTI நபர்கள் விரிவான சமூகத்தில் முக்கியமாக தம் குடும்பங்கள், கல்வி நிறுவனங்களில், வேலை செய்யுமிடங்களில் மற்றும் பொது இடங்களில் பாரபட்சம், துன்புறுத்தல் மற்றும் வன்முறையை சந்திக்க, தொடர்ச்சியாக தன்பாலீர்ப்புள்ள பாலியல் செயற்பாடுகளை தண்டனைக்குரிய குற்றமாக்குதல் காரணமாக அமைகின்றது.

- கடந்த சில வருடங்களில், பொலிஸார் ஹோட்டல்கள் மற்றும் வேறு இடங்களை சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கைகள் மூலம் நபர்களை சம்மதத்துடனான ஓர்பாலீர்ப்புள்ள பாலியல் உறவுகளில் ஈடுபட்டமை மற்றும் வேறு குற்றங்களுக்காக கைது செய்துள்ளனர். பொலிஸாரின் "செயல்த்திறன்" அறிக்கைகள் அடிக்கடி "தன்பாலீபுள்ள பாலியல் உறவுகள்" தொடர்பான கைதுகள் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடுகின்றன. கைது செய்யப்பட்ட நபர்கள் சாட்டைகளால் அடிக்கப்படுத்தல் உட்பட பல துன்புறுத்தல்களை சந்தித்துள்ளனர். பல நேரங்களில், நீதிமன்றங்கள் குற்றம் சாட்டப்பட்டுள்ள நபரின் சம்மதமின்றி எச்.ஐ.வி பரிசோதனை செய்யுமாறு கட்டளை பிறப்பித்துள்ள, இந்த பரிசோதனை முடிவுகளும் நீதிமன்றத்தின் முன் பொதுவாக அனைவர்க்கும் அறிவிக்கப்படுகின்றன.

- அண்மைய ஊடக அறிக்கைகள் 2017ம் ஆண்டு முதல் சட்ட அமுல்படுத்தல் அதிகாரிகள் நபர்களை ஓர்பாலீப்புள்ள பாலியல் உறவை நி'ரூபிக்க, கட்டாயமான குதவழி மற்றும் யோனிவழியான சோதனைகளுக்கு உட்படுத்தியுள்ளனர் எனக்கூறுகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் பாலியல் வன்முறை, மனிதாபிமானமற்ற கொடூர செயல் மற்றும் இழிவு படுத்தும் செயல்களாக கருதப்படுகின்றன, இவை இலங்கை அரசியலமைப்பினாலும் சர்வதேச சட்ட ஆவணங்களினாலும் தடைசெய்யப்பட்டுள்ளன. இவாறான பல சந்தர்ப்பங்களில், இதற்கு உட்படுத்தப்படுகின்றன நபர்கள் இவ்வாறான சோதனைகளை மறுக்க முடியும் என அறிந்திருக்கவில்லை.

## உள்நாட்டு முன்னேற்றங்கள்:

- 2016ம் ஆண்டு விமலசிரி மற்றும் மருதானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் அரச சட்ட அதிகாரிக்கு இடையிலாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், உயர்நீதி மன்றம் பின்வரும் கருத்தினை கொண்டிருந்தது, இலங்கை சட்டத்தில் பகுதி 365ன் கீழ் பாரதூரமான இழிசெயல் குற்றமாக காணப்படும் போதிலும் “நவீன கால சிந்தனையின் அடிப்படையில், வயது வந்தவர்களுக்கிடையில் சம்மதத்துடன் நடைபெறும் பாலியல் செயற்பாடுகள் அரசினால் கட்டுப்படுத்தப்படக் கூடாது மற்றும் அது குற்றத்திற்கான ஒரு காரணமாக அமையக்கூடாது. இதனை குற்றமாக கருதுதல் பல்லாண்டு காலங்களாக நீடித்து வந்த ஒன்றாக காணப்படுகிறது” அத்துடன் இந்த குற்றத்திற்கான தடுத்து வைக்கும் தண்டனை தகுந்ததன்று.

- உயர் நீதிமன்ற நீதிபதி பி. பி அலுவிஹாரவின் தலைமையில் 2016ம் ஆண்டு “தண்டனைச்சட்டக் கோவையை மற்றும் குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக் கோவையை திருத்தியமைப்பதற்கான விசேட குழு” நிறுவப்பட்டது. இந்த குழு இலங்கையில் தண்டனைச் சட்டங்களை காலகட்டத்திற்கேற்ப திருத்தியமைக்க பரிந்துரைகளை வழங்க அமைக்கப்பட்டது. அது பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல சட்ட ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் வழங்கியுள்ளது. தற்போது இந்த குழு தண்டனைச்சட்டக் கோவையில் உள்ள பாலியல் குற்றங்களை பரிசீலனை செய்கின்றது, இதில் பகுதிகள் 365, 365யு மற்றும் 399ம் உள்ளடங்குகின்றன.

## சர்வதேச முன்னேற்றங்கள்:

- 2012ம் ஆண்டு இலங்கையின் இரண்டாவது தவணை முடியான மீளாய்வின் போது, இரண்டு நாடுகள் (கனடா, ஆர்ஜன்டீனா) இலங்கை வயது வந்தவர்களிடையே தன்பாலீர்ப்புள்ள பாலியல் செயற்பாடுகளை குற்றமற்றதாக்க வேண்டுமென பரிந்துரை செய்தது. இதற்கு இலங்கை பரிந்துரைகள் பதிவு செய்யப்படுவதாக பதிலளித்தது.
- 2017ம் ஆண்டு இலங்கையின் 3 சர்வதேச தவணை வாரியான மீளாய்வினில், ஆறு நாடுகள் (அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, பிரேசில், கனடா, சுவீடன், உருகுவே, ஹோண்டுராஸ்) இலங்கை வயது வந்தவர்களிடையே, தன்பாலீர்ப்புள்ள பாலியல் செயற்பாடுகளை குற்றமற்றதாக்க வேண்டுமென பரிந்துரை செய்தன, அதற்கு இலங்கை பரிந்துரைகள் பதிவு செய்யப்படுவதாக பதிலளித்தது..
- 2017 ஆண்டு இலங்கையின் மூன்றாவது சர்வதேச தவணை வாரியான மீளாய்வின் பொது இலங்கை உத்தியோகபூர்வமாக தாம் “தண்டனைச்சட்டக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் அனைத்தும் சர்வதேச மனித உரிமைகள் தரத்துடன் அமையும் வகையில் திருத்தியமைக்க அர்ப்பணிப்புடன் உள்ளதாக” மற்றும் ”டுபுடீவுஐஞ சமூகத்தினருக்கு பாரபட்சமாக சட்டத்தின் எந்தவொரு பகுதியும் பயன்படுத்தப்படாதெனவும்” கூறினர்.
- 2017ம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான குழு, இலங்கை “சம்மதத்துடனான தன்பாலீர்ப்புள்ள பாலியல் செயற்பாடுகளை குற்றமற்றதாக்கும் விதத்தில் தண்டனைச்சட்டக் கோவையை திருத்தியமைக்க வேண்டுமென” வேண்டுகோள் விடுத்தது.
- உலகில் தன்பாலீர்ப்புள்ள பாலியல் செயற்பாடுகளை குற்றமற்றதாக்க பல நாடுகள் முன்வந்துள்ளன, இவற்றில் பின்வரும் நாடுகளும் அடங்கும் இந்தியா 2018ல், போஸ்ட்வானா மற்றும் அங்கோலா 2019ல், மற்றும் பூட்டான் 2020ல்.

**பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பரிந்துரைகள்:**

- தண்டனைச்சட்டக்கோவையின் பகுதிகள் 365 மற்றும் 365யுஜ நீக்க பிரேரணைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் அப்பிரேரணைகளை ஆதரித்தல்.
- தண்டனைச்சட்டக் கோவை மற்றும் அலைந்து திரிவோர் கட்டளை சட்டத்தை சரியாக புரிந்துகொள்ளவும் அவற்றை LGBTI இலங்கையர்களுக்கு உபயோகிக்காதிருக்க, பொது சேவை உத்தியோகத்தர்கள் விசேடமாக பொலிஸாருக்கு செயன்முறை வழிகாட்டிகளை வழங்குவதை ஊக்குவித்தல்.
- டுபுடீவுஜ இலங்கையர்களை பொலிஸ் நிலையங்களில் மற்றும் வேறு இடங்களில் சமமாகவும் கண்ணியமாகவும் நடத்துவதற்கான வழிகாட்டல்களை பொலிஸாருக்கு வழங்குவதை ஊக்குவித்தல்.

## B. திருநர்களான இலங்கையர்களை கட்டுப்படுத்தல்

**பிரச்சனை:** தண்டனைச்சட்டக் கோவையின் பகுதி 399 மற்றும் அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டத்தின் பகுதி 7ன் கீழ் திருநர்களான இலங்கையர்களை குற்றப்படுத்த தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

- பகுதி 399 "ஆள்மாறாட்டம் செய்து ஏமாற்றுவதனை" குற்றமாக்குகின்றது இதனை மீறுவதற்கான தண்டனை ஓராண்டு வரையான சிறைத்தண்டனை மற்றும்.˙.அல்லது அபராதம்.

- அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டத்தின் பகுதி 7 "பாரதூரமான இழிசெயல்" செய்வதை அல்லது அதனை ஊக்குவிப்பதை அல்லது "திருத்த முடியாத திருடர்கள்" "தவறான அல்லது இயற்கைக்கு மாறான பாலியல் உறவை" பொது இடங்களில் பரிமாற்றம் செய்வதை தடை செய்கின்றது. இதனை மீறுவதற்கான தண்டனை ஆறு மாதங்கள் வரையான சிறைத்தண்டனை மற்றும்.˙.அல்லது அபராதம்.

- பகுதி 399 மற்றும் அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டம் அவை பிரித்தானியர்களினால் 1883 மற்றும் 1841ம் ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது முதல் மாற்றங்கள் இன்றி இன்று வரை இருந்து வருகின்றன.

### தற்போதைய நிலை:

- பகுதி 399 பிழையாக திருநர்களான இலங்கையர்களுக்கு எதிராக பயன்படுத்தப்படுகின்றது, இது அவர்கள் தெரிவு செய்த பால்நிலை அடையாளத்தை, "தம் உண்மையான அடையாளத்தை வேண்டுமென்றே மாற்றி" மற்றவர்களுக்கு பிழையான தோற்றத்தை காண்பித்தல் என வரையறுப்பதனாலாகும்.

- அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டம் பிழையாக திருநர்களான இலங்கையர்களுக்கு எதிராக பயன்படுத்தப்படுகின்றது, ஏனெனில் அவர்கள் தம் தோற்றத்தின் மூலம், சட்டவிரோத செயல்களில் ஈடுபட முயல்கின்றனர் என தவறாக புரிந்து கொள்ளப்படுகின்றது. இது முக்கியமாக பாலியல் தொழிலாளர்களான திருநர்கள் மற்றும் எதிர்பாலினரின் உடைகளை அணிவோருக்கும் எதிராக பயன்படுத்தப்படுகின்றது.

- இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலுமே, திருநர்களின் பால்நிலை அடையாளம் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படுகின்றது (அவர்கள் எவ்வித குற்றத்திலும் ஈடுபடாமலேயே)

- பகுதி 399ன் கீழ் மற்றும் அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டத்தின் கீழ், 1948ம் ஆண்டு முதல் மிகக்குறைவான குற்றப்படுத்தல்களே செய்யப்பட்டாலும் அவை மறைமுகமாக இலங்கையரான திருநர்கள் பாரபட்சமாக நடத்தப்படவும், துன்புறுத்தப்படவும் மற்றும் வன்முறைக்குள்ளாக்கவும் வழிவகுக்கின்றது.

- இலங்கையர்களான திருநர்களை துன்புறுத்த, உடல் ரீதியாக அல்லது பாலியல் ரீதியாக தாக்க அல்லது அவர்களிடம் இலஞ்சம் கோர இந்த சட்டங்களை பொலிஸார் பயன்படுத்துகின்றனர். இந்த சட்டங்களின் இருப்பு திருநர்களை குற்றங்களினால் பாதிக்கப்பட்டோராகவும் மற்றும் அவற்றை பொலிஸாரிடம் அறிவிக்காதிருக்கும் நிலைக்கும் தள்ளுகிறது.

- பொது சேவை அதிகாரிகளும், உத்தியோகபூர்வ அடையாள ஆவணங்கள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் இலங்கையர்களான திருநர்களை பாரபட்சப்படுத்தவும், அவர்களை துன்புறுத்தவும் பகுதி 399னை பயன்படுத்துகின்றனர். கல்வி நிறுவனங்கள், சுகாதார சேவை வழங்குவோர் மற்றும் குடிவரவு மற்றும் குடியகழ்வு அதிகாரிகள் போன்றோர்.

### உள்நாட்டு முன்னேற்றங்கள:

- இலங்கை உயர் நீதிமன்ற நீதவான் பி. பி. அலுவிஹார தலைமையிலானதொரு குழுவான "தண்டனைச்சட்டக் கோவையை மற்றும் குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக் கோவையை திருத்துவதற்கான விசேட குழு" 2016ம் ஆண்டு இலங்கையில் உள்ள தண்டனைச் சட்டங்களை திருத்துவதற்கான பரிந்துரைகளை வழங்க நிறுவப்பட்டது. இலங்கையின் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பல பரிந்துரைகளை இக்குழு வழங்கியுள்ளது. அது தற்போது தண்டனைச்சட்டக் கோவையில் பகுதி 399 உட்பட்ட பாலியல் குற்றங்களை பரிசீலனை செய்து வருகின்றது.

**சர்வதேச முன்னேற்றங்கள:**

- 2012ம் ஆண்டு இலங்கையின் இரண்டாவது தவணை வாரியான மீளாய்வின் போது, இரண்டு நாடுகள் (கனடா, ஆர்ஜன்டீனா) இலங்கை வயது வந்தவர்களிடையே தன்பாலீர்ப்புள்ள பாலியல் செயற்பாடுகளை குற்றமற்றதாக்க வேண்டுமென பரிந்துரை செய்தது. இதற்கு இலங்கை பரிந்துரைகள் பதிவு செய்யப்படுவதாக பதிலளித்தது.

- 2017ம் ஆண்டில் இலங்கையின் மூன்றாவது தவணை வாரியான மீளாய்வில் இரண்டு நாடுகள் (உருகுவே, ஹோண்டுரஸ்) இலங்கை திருநர்களுக்கு எதிரான வன்முறையை தடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பரிந்துரை செய்தது.

- இதற்கு பதிலளிக்கும் விதத்தில் இலங்கை, பரிந்துரைகள் பதிவு செய்யப்படுகின்றன என பதிலளித்து, "தாம் தண்டனைச்சட்டக் கோவையைத் திருத்தியமைத்து, அனைத்து குற்றங்களும் சர்வதேச மனித உரிமை தரங்களுக்கு அமைவாக இருக்கின்றமையை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் உள்ளதாக" மற்றும் "டுபுடீவுஐளு சமூகத்தினருக்கு பாரபட்சமாக எந்தவொரு சட்டமோ அல்லது அதன் பகுதியோ பயன்படுத்தப் படாதிருப்பதை உறுதி செய்ய அர்ப்பணிப்புடன் உள்ளதாக" உத்தியோகப்பூர்வமாக அறிவித்தது.

**பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பரிந்துரைகள:**

- திருநர்கள் பாரபட்சப் படுத்தப்படுவதை தடுக்கும் வகையில் பகுதி 399 திருத்தியமைப்பதற்கான பிரேரணைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் அப்பிரேரணைகளை ஆதரித்தல் - குறைந்த பட்சம் இதற்கான விளக்கங்களை தெளிவாக வழங்குதல் அதன்மூலம் அது திருநர்களுக்கு எதிராக பாதிக்கப்படுவதை தடுத்தல்.
- அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டத்தின் பகுதி 7னை சீரமைக்க பிரேரணைகளை அறிமுகப்படுத்தல்.
- திருத்தங்களின் படி இலங்கையர்களான திருநர்களுக்கு எதிராக பயன்படுத்தாத வன்னம், தண்டனைச்சட்டக் கோவை மற்றும் அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டங்களை சரியான முறையில் புரிந்து கொள்வதற்கான வழிகாட்டிகளை பொது சேவை அதிகாரிகளுக்கு முக்கியமாக பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்குதல்.

## C. பாரபட்சமின்மைக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளில் குறைபாடு

**பிரச்சனை:** இலங்கையில், பாரபட்சமின்மை மற்றும் சமத்துவத்திற்கான பிரிவுகளாக பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் அங்கீகரிக்கப்பட அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியான கொடுப்பனவுகளில் உள்ள குறைபாடு, இலங்கையர்களான டுபுடீவுஜ சமூகத்தவர்கள் தம் உரிமைகளை முழுமையாக அனுபவிக்க முடியாதபடி செய்கின்றன.

**தற்போதைய நிலை:** அனைத்து பொது சேவை அதிகாரங்களிலும் பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் சார்ந்த பாரபட்சப்படுத்தல் பல சந்தர்ப்பங்களில் நடைபெறக்கூடும். இலங்கையரான டுபுடீவுஜ சமூகத்தினர் கல்வி நிறுவனங்களில், வேலைவாய்ப்பு பெறுவதில், வீடு/ தங்குமிடம் பெறுவதில் மற்றும் சுகாதார சேவைகளை அணுகுவதில் தம் உண்மையான அல்லது வெளிப்படுத்தும் பாலியல் ஈர்ப்பு அல்லது பால்நிலை அடையாளம் காரணமாக தொடர்ச்சியாக பாரபட்சத்தை எதிர்கொள்ளுகின்றனர்:

- **கல்வி** – LGBTI மாணவர்கள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தம் சகபாடிகளிடமிருந்து கேலிக்கொடுமைகளையும், துன்புறுத்தல்களையும் ஏனைய மாணவர்களை விட அதிகமாக சந்திக்கின்றனர், அத்துடன் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளினாலும் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர். வயதிற்கேற்ற பூரண பாலியல் கல்வி மற்றும் உறவுகள் குறித்த கல்வியை வழங்குவதில் உள்ள குறைபாடும் மற்ற மாணவர்களை போலவே LGBTI மாணவர்களையும் பாதிக்கின்றது.
- **தங்குமிடம் / வீடு** – இலங்கையரான LGBTI சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தமக்கு தேவையான வீடு.். தங்குமிடத்தை கண்டுகொள்வதில் தொடர்ந்தும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அநேகமான டுபுடீவுஜ நபர்கள், திடீரென தம் குடும்பங்களினால் கைவிடப்படுவதனால், அவசரமாக தங்குமிடம் கண்டுகொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். LGBTI நபர்கள் தம் அடையாளம் கண்டுபிடிக்கப்படும் போது அடிக்கடி தம் தற்காலிக வாடகை வீடுகள் மற்றும் தங்கும் விடுதிகளில் இருந்து வெளியேற்றப்படுகின்றனர். இலங்கையர்களான திருநர்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் ஏனெனில் அவர்களால் உத்தியோகபூர்வ ஆவணங்களை சமர்ப்பிக்க முடிவதில்லை மற்றும் அவர்களை இலகுவில் அடையாளம் கண்டுகொள்ள முடியும்.
- **சுகாதார சேவைகள்** – இலங்கையரான LGBTI நபர்கள் சுகாதார சேவை நிலையங்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் மூலம் சந்திக்கும் பாரபட்சம் மற்றும் துன்புறுத்தல் காரணமாக, தேவையான சுகாதார சேவைகளை அணுகுவதில் சாதாரண பொதுமக்களை விட அதிகமான சிரமங்களை சந்திக்கின்றனர். (மேலதிக தகவல்களுக்கு பகுதி குஜ பார்க்கவும்)
- **வேலைவாய்ப்பு** – இலங்கையரான LGBTI நபர்கள் வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை சந்திக்கின்றனர், முக்கியமாக திருநர்கள் சரியான அடையாள ஆவணங்களின் பற்றாக்குறையினால் மற்றும் அவர்களை இலகுவில் அடையாளம் காணக்கூடியதனாலும் வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது. வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொண்ட பின் டுபுடீவுஜ நபர்கள் தம் அடையாளம் இனம்காணப்படும் என்ற பயத்தினால் தம் அடையாளத்தை மறைக்க அதிகமான பிரயத்தனங்களை செய்கின்றனர். டுபுடீவுஜ என தம்மை அடையாளப்படுத்தும் நபர்கள் தொடர்ச்சியான பாரபட்சத்தை (குறைவான சம்பளம் பதவி உயர்வுகள் மறுக்கப்படுத்தல் போன்றவை) மற்றும் வார்த்தை மூலமான மற்றும் உடல் ரீதியான துன்புறுத்தல்களை சந்திக்கின்றனர்.
- **பொது நிர்வாகம்** – இலங்கையரான LGBTI நபர்கள் பொது நிர்வாக அதிகாரிகளினால், பிரதேச அரச அதிகாரிகள் தொடங்கி மத்திய அரச அதிகாரிகளினாலும் பல சந்தர்ப்பங்களிலும் பாரபட்சத்தை சந்திக்கின்றனர். முக்கியமாக உத்தியோகபூர்வ செயற்பாடுகளுக்கான அதிகாரிகள். (கிராம சேவை உத்தியோகத்தர்கள் போன்றோர்)
- இலங்கையரான LGBTI நபர்கள் தம் வீட்டு சூழலில் மட்டுமல்லாது பொது இடங்களிலும் கூட பாலியல், உளவியல் மற்றும் உடல் ரீதியான வன்முறையை சந்திக்கின்றனர்.
- திருநர்கள் முக்கியமாக இவ்வாறான எல்லாவித பாரபட்சத்தினாலும் பாதிக்கப் படுகின்றனர், ஏனெனில் அவர்கள் இலகுவில் இனம்காணக்கூடியவர்களாக இருப்பதனால் மற்றும் சரியான அடையாள ஆவணங்களை கொண்டிராததனால்.

### சட்ட மற்றும் கொள்கைப்பின்னணி:

- அரசியலமைப்பின் 12ம் உறுப்புரையில் பாரபட்சமின்மை மற்றும் சமத்துவம் எனும் பகுதிகளில், இனம், மதம், மொழி, பால், அரசியல் கருத்து மற்றும் பிறப்பிடம் என்பவற்றை போல, பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் வெளிப்படையாக உள்ளடக்கப்படவில்லை.

- உறுப்புரை 12ன் "அல்லது இவ்வாறான வேறு ஏதேனும் காரணிகளினால்" எனும் பகுதியின் படி பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவை மறைமுகமாக பாரபட்சமின்மைக்கான காரணிகளாக இனம்கண்டுகொள்ளலாம், எனினும் இது கண்டிப்பாக நீதித்துறை அதிகாரத்தை சார்ந்துள்ளது.

- மேலதிகமாக அரசியலமைப்பின் உறுப்புரை 16(1) மற்றும் 80(3) சட்டங்கள் அமுலாக்கப்பட்ட பின்னதான நீதித்துறையின் மீளாய்வினை தடை செய்கின்றது. அப்படியெனில் டுபுடீவுஐ இலங்கையர்களை பாரபட்சப்படுத்தும் சட்டங்கள் நீதித்துறையினால் மீளாய்வு செய்து, பாரபட்சமின்மையை உறுதி செய்ய அவை செல்லுபடியற்றவை என அறிவிக்க முடியாது.

- டுபுடீவுஐ இலங்கையர்களை பாரபட்சம் மற்றும் வெறுப்பினால் அவர்களுக்கு எதிராக செய்யப்படும் குற்றங்களில் இருந்து பாதுகாக்க எந்தவொரு சட்டமும் காணப்படவில்லை.

- அரசியலமைப்பில் அல்லது வேறு சட்டத்தின் மூலம் பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றை பாரபட்சமின்மைக்கான பகுதிகளாக வெளிப்படையாக அங்கீகரித்தல், மற்றும் அத்துடன் அரசியலமைப்பின் உறுப்புரை 16(1) மற்றும் 80(3) ஆகியவை சட்டம் அமுல்படுத்தப்பட்ட பின்னும் அதை நீதித்துறை மீளாய்விற்குட்படுத்தக்கூடிய வண்ணம் மாற்றுதல் என்பன டுபுடீவுஐ இலங்கையர்கள் பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை சார் அடையாளம் தொடர்புடைய அடிப்படை உரிமை மீறல்களுக்கான நீதித்துறை தீர்வுகளை பெற்றுக்கொள்ள வழிவகுக்கும்.

## உள்நாட்டு முன்னேற்றங்கள்:

- 2016ம் ஆண்டில், அரசியலமைப்பு சீர்த்திருத்தத்திற்கான பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழு, புதிதாக உருவாக்கப்படும் எந்தவொரு அரசியலமைப்பும் நேரடியாக டுபுடீவுஐ நபர்களை பாரபட்சத்தில் இருந்து பாதுகாக்க வேண்டுமென பரிந்துரை செய்தது.

- 2017ம் ஆண்டு ஜனவரி மாதம், மனித உரிமைகளை ஊக்குவிக்கும் மற்றும் பாதுகாக்கும் தேசிய செயற்பாட்டு திட்டத்தில் LGBTI நபர்களுக்கான, பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் உட்பட உரிமைகளை உள்ளடக்குவதனை அமைச்சரவை நிராகரித்தது.

- பாராளுமன்றத்தின் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான துறைசார் மேற்பார்வை குழு 2016 முதல் பாடசாலை பாடத்திட்டத்தில் பூரண பாலியல் கல்வி பாடத்தை மேலும் விரிவுபடுத்த முனைந்து வருகின்றது. இதில் கல்வியமைச்சு, சுகாதார அமைச்சு, குடும்ப சுகாதார பணிமனை, சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, கல்வியியலாளர்கள் மற்றும் துறைசார் ஆய்வாளர்கள் போன்றோரை இணைத்து பல அறிக்கைகளையும் தயாரித்துள்ளனர்.

- பெண்களுக்கெதிரான பாரபட்சத்தை இல்லாதொழிக்கும் சர்வதேச குழுவுக்கான நிழல் அறிக்கையில், இலங்கையை சேர்ந்த டுபுடீவுஐ நிறுவனங்கள், தன்பாலீர்ப்புள்ள பெண்கள் இருபாலீர்ப்புள்ள பெண்கள் மற்றும் திருநங்கைகள், எதிர்கொள்ளும் பாரபட்சமான நடத்தையை, பொலிஸ் அதிகாரிகளினால் ஏற்படுத்தப்படும் துன்புறுத்தல்கள் மற்றும் வன்முறை அத்துடன் வேலைத்தளங்களில் சந்திக்கும் பால்நிலை சார் வன்முறைகள் போன்றவற்றை முக்கியமாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

- சர்வதேச சிறுவர் உரிமைக் குழுவுக்கான நிழல் அறிக்கையில், இலங்கையை சேர்ந்த டுபுடீவுஐ நிறுவனங்கள் தன்பாலீர்ப்புள்ள பெண்கள் இருபாலீர்ப்புள்ள பெண்கள் மற்றும் திருநங்கைகள், எதிர்கொள்ளும் பாரபட்சமான நடத்தையை, பொலிஸ் அதிகாரிகளினால் ஏற்படுத்தப்படும் துன்புறுத்தல்கள் மற்றும் வன்முறை அத்துடன் வேலைத்தளங்களில் சந்திக்கும் பால்நிலை சார் வன்முறைகள் போன்றவற்றை முக்கியமாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

## சர்வதேச முன்னேற்றங்கள்:

- 2017ம் ஆண்டு, பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் குழு, இலங்கையை "டுபுடீவுஐ நபர்களுக்கு எதிரான வன்முறையை தடுத்து அவர்களும் சமமான முறையில் மனித உரிமைகள் அனைத்தையும் அனுபவிப்பதை உறுதிசெய்ய, முக்கியமாக சுகாதார சேவைகள், கல்வி, வேலைவாய்ப்புகள் மற்றும் வீடு/ தங்குமிடத்துக்கான அணுகல் காணப்படுவதை உறுதி செய்ய, உடனடியான நடவடிக்கைகளை எடுக்குமாறு" பணித்தது. அத்துடன் பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளத்தை அங்கீகரிக்கும் முழுமையான பாரபட்சமற்றதொரு சட்ட முறைமையை தழுவுமாறும் பணித்தது.

- 2017ம் ஆண்டில், பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான உடன்படிக்கையுடன் இலங்கையின் முன்னேற்றங்களை ஒப்பிட்டு மீளாய்வு செய்த, பெண்களுக்கெதிரான பாகுபாடுகளை இல்லாதொழிப்பதற்கான சர்வதேச குழு,

பாரபட்சமின்மைக்கான காரணியாக பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளத்தை உள்ளடக்க இலங்கை சரியான கவனம் செலுத்த வேண்டுமென பரிந்துரை செய்தது. அத்துடன் இலங்கை "பொறுப்புள்ள பாலியல் நடத்தையைக் குறித்ததான, வயதிற்கு தகுந்த பூரண பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார மற்றும் உரிமைகள் சார் கல்வியை நிறுவனப்படுத்த வேண்டும்" எனவும் பரிந்துரை செய்தது.

- 2018ம் ஆண்டு சிறுவர் உரிமைகளுக்கான சர்வதேச குழு, இலங்கை டுபுடீவுஜ சிறுவர்களை கணக்கில் கொள்ளும் முழுமையான பாரபட்சமற்ற பாதுகாப்பினை சட்டமாக்க வேண்டுமென பரிந்துரை செய்தது. அத்துடன் இலங்கை "பாரபட்சமின்மை மற்றும் சமத்துவம் குறித்த பகுதிகளை அனைத்து வயதிலுமான சிறுவர்களுக்கான பாடசாலை கல்வித்திட்டத்தில் கட்டாயமாக்க வேண்டும்" எனவும் பரிந்துரை செய்தது.
- 2017ம் ஆண்டு இலங்கையின் மூன்றாவது சர்வதேச தவணை வாரியான மீளாய்வினில், இலங்கை உத்தியோகபூர்வமாக "தாம் பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் சார் பாரபட்சமின்மையை உறுதி செய்யும் சட்ட மீளாய்வினை மேற்கொள்ள அர்ப்பணிப்புடன் உள்ளதாக" அறிவித்தது.

**பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பரிந்துரைகள்:**

குறுகிய - இடைப்பட்ட காலத்துக்கான பரிந்துரைகள்

- பாலியல் ஈர்ப்பு மற்றும், பால்நிலை அடையாளம் தொடர்பான பாரபட்சமின்மையை மற்றும் பாதுகாப்பை வெளிப்படையாக உள்ளடக்கிய விரிவான பாரபட்சமின்மை பிரேரணைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் அப்பிரேரணைகளை ஆதரித்தல்
- எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும், மனித உரிமைகளை ஊக்குவிக்கும் மற்றும் பாதுகாக்கும் தேசிய செயற்பாட்டு திட்டங்களில் பாரபட்சத்தில் இருந்து பாதுகாக்கப்படும் பகுதிகளில் பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளத்தை உள்ளடக்க ஆதரவளித்தல் மற்றும் அதை ஊக்குவித்தல்
- துறைசார் மேற்பார்வை குழுக்களின் கூட்டங்களில் பொறுப்பான பொதுச்சேவை அதிகாரிகளை அவர்களின் பொதுச்சேவை நிறுவனங்களில் LGBTI நபர்களின் தேவைகளுக்கு பதிலளிக்கும் கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகள் தொடர்பில் கேள்வி எழுப்புதல்
- சுகாதார சேவை நிறுவனங்களில், கல்வி நிறுவனங்களில் மற்றும் பொது நிர்வாக அதிகாரங்களில் பணியாற்றும் பொது சேவை அதிகாரிகளுக்கு LGBTI நபர்களை சரியான முறையில் நடத்துவது தொடர்பான வழிகாட்டிகளை வழங்குவதை ஆதரித்தல்
- முன்னிலை பொது சேவை அதிகாரிகளுக்கு LGBTI நபர்களை சரியான விதத்தில் அணுக மற்றும் ஆதரிக்க தேவையான திறன்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் (ஆசிரியர்கள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் போன்றோர்)
- துறைசார் மேற்பார்வை குழுக்களில், பூரண பாலியல் கல்வியை பாடசாலைகளில் அறிமுகப்படுத்த மற்றும் LGBTI நபர்களுக்கு சார்பான பாரபட்சமற்ற கல்வி விடயங்களை பாடசாலை பாடத்திட்டத்தில் உள்ளடக்குவதற்கான தொடர்ச்சியான ஆதரவினை வழங்குதல்

நீண்ட காலத்துக்கான பரிந்துரைகள்

- பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றை பாரபட்சமின்மை மற்றும் பாதுகாப்புக்கான காரணிகளாக அரசியலமைப்பின் உறுப்புரைகளில் உள்ளடக்குவதற்கான பிரேரணைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் ஆதரித்தல்
- அரசியலமைப்பின் உறுப்புரை 16(1) மற்றும் 80(3)யினை திருத்தி, சட்ட அமுலாக்கத்தின் பின் அவற்றை நீத்தித்துறையின் மீளாய்விற்கு உட்படுத்த பிரேரணைகளை முன்வைத்தல் மற்றும் ஆதரித்தல்

## D. பால்நிலை அங்கீகாரம்

**பிரச்சனை:** திருநர்களான இலங்கையர்கள் உத்தியோகபூர்வ சூழல்களில் தம் பால்நிலைக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள பல சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

- இலங்கையில் ஒருவரின் நாளாந்த வாழ்வில் பல சந்தர்ப்பங்களில் பிறப்புச்சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை காண்பிக்கப்பட வேண்டும் - உதாரணமாக வேலைவாய்ப்பிற்கு விண்ணப்பிக்கும் போது, வங்கிக்கு செல்லும் போது, அரச வைத்திய சாலைகளில் சிகிச்சைக்காக செல்லும் போது, அரச அலுவலகமொன்றிற்கு செல்லும் போது அல்லது பொலிஸாரிடம் சேவைகளை பெறும் போது. இவ்வாறான எல்லா சந்தர்ப்பங்களிலும், திருநரான அல்லது இடைஇலிங்கத்தவரான ஒருவருடைய உத்தியோகபூர்வ ஆவணங்கள் மற்றும் பெயர் அவரின் பால்நிலை அடையாளத்திலிருந்து வேறுபடுவதனால், அவர் அவமானப்படுத்தப்பட, பாரபட்சப்படுத்தப்பட, துன்புறுத்தப்பட மற்றும் வன்முறைக்குட்படுத்தப் படக்கூடிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்.
- 2016ம் ஆண்டு ஜுன் மாதம் சுகாதார அமைச்சினால் நபர்கள் தம் அடையாள ஆவணங்களை மாற்றிக்கொண்டு பிறப்பில் குறிக்கப்பட்ட பாலுக்கு மாறாக தாம் விரும்பும் பால்நிலை அடையாளத்தை பெற ஒரு சுற்றுநிருபத்தின் மூலம் பால்நிலை அடையாள சான்றிதழ் வழங்க ஒரு முறைமை அமுல்படுத்தப்பட்ட போதிலும், அதை பெற்றுக்கொள்வதற்கான நடைமுறை சற்று சிக்கலானதாகும்.

### தற்போதைய நிலை:

- பால்நிலை அடையாள சான்றிதழை பெற ஒருவர் "மருத்துவ சத்திரசிகிச்சை மற்றும் ஹோர்மோன் சிகிச்சையை செய்துகொண்டிருக்க" வேண்டும். முதலில் ஒரு உளவள நிபுணரை சந்தித்து, அவர் இந்த நபர் சத்திரசிகிச்சையை செய்ய வேண்டுமென தீர்மானித்த பின் அந்த நபர் சத்திர சிகிச்சை செய்து கொள்ள முடியும் என்பதே இதற்கான வழமையான நடைமுறையாகும். இதற்கான உத்தியோகபூர்வ கடிதம் வழங்கப்பட்ட பின், அந்த நபர் சத்திர சிகிச்சைக்கு முன் ஹோர்மோன் சிகிச்சையை ஆரம்பிப்பார். இறுதியில் உளவள நிபுணர் இந்த நபர் "பால்நிலை மாற்ற நடைமுறைக்கு உட்படுத்தப்பட்டார்" என அத்தாட்சிப்படுத்த வேண்டும்.
- இவ்வாறான நடைமுறைகள் விலையுயர்ந்தவை மற்றும் பெருநகரங்களுக்கு வெளியே இவற்றை பெற்றுக்கொள்ள முடியாது. சில சத்திர சிகிச்சைகளையும் இலங்கையில் பெற்றுக்கொள்ள முடியாது, அவற்றை வெளிநாடுகளில் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே பால்நிலை அங்கீகார சான்றிதலை பெற்றுக்கொள்ள, திருநர்களான இலங்கையர்கள் தமக்கு கட்டுப்படியாகாத செலவுகளை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகின்றனர்.
- பால்நிலை அங்கீகார சான்றிதழை பெற்றுக்கொண்ட நபர்களுக்கு, சில உத்தியோகபூர்வ ஆவணங்களை மாற்றுவதனால் அவர்களின் முன்னைய பால்நிலை அனைவருக்கும் வெளிப்படுத்தப்படும் துர்பாக்கிய நிலை ஏற்படுகின்றது. உதாரணமாக, பால்நிலை அங்கீகார சான்றிதழ் மூலம் பெறப்படும் பிறப்புச்சான்றிதழ்கள், புதியதொரு சான்றிதழாக அல்லாமல், ஒரு நபரிடம் ஏற்கெனவே காணப்படும் பிறப்புச்சான்றிதழிலேயே திருத்தங்கள் செய்து வழங்கப்படுகின்றது. இது போலவே கடவுச்சீட்டுகளிலும், இதன் உரிமையாளர் ஒரு திருநர் இதற்கு முன்னதான அவரது கடவுச்சீட்டு அவரது முன்னைய பெயர் மற்றும் பால்நிலையின் கீழ் வழங்கப்பட்டிருந்தது, என்ற மேற்குறிப்புடனேயே வழங்கப்படும்.

### உள்நாட்டு முன்னேற்றங்கள்

- பால்நிலை அங்கீகார சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கான நடைமுறை, இலங்கையை சேர்ந்த LGBTI நிறுவனங்கள், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவை மத்தியஸ்தராக கொண்டு தொடர்ச்சியாக பல ஆண்டுகளாக செய்த செயற்பாடுகளின் பலனாகவே உருவாக்கப்பட்டது. எனினும் இதை அமுல்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் அரச நிறுவங்கள் முழுமையாக LGBTI நபர்களின் தேவைகளுக்கு அமைய முழுமையான புரிந்துணர்வுடன் செயற்பட முடியாது, மற்றும் அவ்வாறாக செயற்பட முயலும் சந்தர்ப்பங்களிலும் அடிக்கடி சட்ட ரீதியான மற்றும் நிறுவன ரீதியான தடைகள் காணப்படுகின்றன. உதாரணமாக, 1954ம் ஆண்டின் பிறப்பு, இறப்பு மற்றும் திருமண சட்டத்தின் பகுதிகள் பல, பால்நிலை அங்கீகார சான்றிதழ் வைத்திருப்போருக்கு புதிய பிறப்புச்சான்றிதழ் வழங்குவதை தடுக்கின்றன.

## சர்வதேச முன்னேற்றங்கள்

- சர்வதேச சிறந்த நடைமுறைகளின் படி, பால்நிலை அங்கீகாரம் வழங்க, சத்திரசிகிச்சை மற்றும் ஹோர்மோன் மூல சிகிச்சை தேவை இல்லை. பல நாடுகளில் ஒரு நபர் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருந்து, அவர் தமக்கு பிறப்பில் குறிக்கப்பட்ட பாலுக்கு மாறாக தன் மிகுதியான வாழ்வை வேறு ஒரு பால்நிலை அடையாளத்துடன் வாழ தீர்மானித்தால், அவர்களால் ஒரு பால்நிலை அங்கீகார சான்றிதழை அல்லது அதற்கு ஒத்த ஆவணத்தை இலகுவானதொரு சுய வெளிப்பாடு அறிவிப்பின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பரிந்துரைகள்:**

- உத்தியோகபூர்வ ஆவணங்களில் திருநர் மற்றும் இடைஇலிங்கத்தவர்களின் பால்நிலையை அங்கீகரிக்கும், விரைவான, வெளிப்படையான, அனைவரும் அணுகக்கூடிய வகையிலான, மருத்துவ நடைமுறைகளின்றி, சுய வெளிப்பாடு அறிவிப்பின் மூலம் பால்நிலை அங்கீகரிப்பு நடைமுறைகளுக்கான பிரேரணைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் அவற்றுக்கு ஆதரவு வழங்குதல்
- திருநர்கள் மற்றும் இடைஇலிங்கத்தவர்களுக்கு இலகுவில் உத்தியோகபூர்வ அடையாள ஆவணங்களை வழங்கக்கூடிய விதத்தில், 1954ம் ஆண்டின் பிறப்பு இறப்பு மற்றும் திருமண சட்டத்தில் மற்றும் 1948ம் ஆண்டின் குடிவரவு குடியகழ்வு சட்டத்தில் திருத்தங்களைமேற்கொள்ளல்
- மாற்றப்பட்ட அனைத்து உத்தியோகபூர்வ ஆவணங்களும் புதிதாக வழங்கப்படும் வகையில் சுகாதார அமைச்சு, ஆட்பதிவு திணைக்களம் மற்றும் குடிவரவு குடியகழ்வு திணைக்களங்களுக்கிடையில் இணைப்புகளை ஏற்படுத்துவதற்கான பரிந்துரைகளை செய்தல்

## E. சுகாதார சேவைகளை அணுகல்

**பிரச்சனை:** LGBTI இலங்கையர்கள் தேவையான சுகாதார சேவைகளை அணுகுவதில் சாதாரண பொது மக்களை விட அதிக சவால்களுக்கு முகம்கொடுக்கின்றனர். இது அவர்களின் உயிரையும் ஆபத்துக்குள்ளாக்குகிறது.

**தற்போதைய நிலை:**

- சுகாதார சேவை நிலையங்களில் LGBTI இலங்கையர்களின் மருத்துவ வரலாற்றின் இரகசியத்தன்மையை பாதுகாப்பதில் அலட்சியமும் குறைவான கரிசனையும் காணப்படுகின்றது. LGBTI இலங்கையர்கள் குறிப்பாக திருநர்கள், தம் மருத்துவ தகவல்கள் அதிகமாக மருத்துவ ஊழியர்களல்லாத மருத்துவமனை ஊழியர்களுடன், துப்பரவு மற்றும் காவல் ஊழியர்களுடன், பகிரப்படுவதாக அறிவித்துள்ளனர். இவ்வாறான இரகசியத்தன்மைய இன்மை LGBTI நபர்களுக்கு மருத்துவ சேவைகளை நாடுவதை ஒரு மனஅழுத்தம் நிறைந்த மற்றும் அவமானமான அனுபவமாக மாற்றுகின்றது.

- LGBTI இலங்கையர்கள் விசேடமாக திருநர்கள், அரச மருத்துவ சேவை நிலையங்களில் அச்சுறுத்தல், துன்புறுத்தல் மற்றும் பாரபட்சத்தை சந்திக்கின்றனர். LGBTI நபர்கள், அதிகமாக வைத்தியசாலைகளில் மற்றும் சிகிச்சை நிலையங்களில், தேவையற்ற கேள்விக்குள்ளாக்கப்பட்டு மற்றும் ஏளனமாக நடத்தப்படுவதாக அறிவித்துள்ளனர்.

- திருநர்களான இலங்கையர்கள் குறிப்பாக, மருத்துவ ஊழியர்களினால் பாலியல் துன்புறுத்தல் மற்றும் வேறு விதமான துன்புறுத்தல்களுக்கு உட்பட்டதாக, பிறப்புறுப்புகளில் தேவையற்ற பரிசோதனைகள் போன்றவற்றை எதிர்கொண்டதாக தெரிவித்துள்ளனர். அரச மருத்துவ நிலையங்களில், திருநர்களான இலங்கையர் அவர்களின் மருத்துவ விடயங்கள் தேவை இல்லாமல் தாமதப்படுத்தப்படுவதாகவும் தமது முன்பதிவுகள் வரிசையின் பின்பகுதிக்கு தள்ளப்படுவதாகவும் கூறுகின்றனர்.

- LGBTI இலங்கையர்களுக்காக காணப்படும் சுகாதார சேவைகள் தொடர்பில் தகவல்கள் மற்றும் விழிப்புணர்வூட்டல் அரச தரப்பிலிருந்து குறைவாகவே காணப்படுகின்றது. முக்கியமான சேவைகளான எச்.ஐ.வி மற்றும் பாலியல் தொற்றுக்களுக்கான பரிசோதனை, ஹோர்மோன் சிகிச்சைகள் மற்றும் பால் மாற்று சத்திர சிகிச்சைகள் போன்றவை அரச வைத்தியசாலைகளில் காணப்படுகின்றன எனினும் அவை அதிகமாக பிரசித்தப்படுத்தப்படவில்லை, முக்கியமாக நகரங்களுக்கு வெளியே உள்ள இளைஞர்கள் மத்தியில் இந்த தகவல்கள் பகிரப்படவில்லை.

- LGBTI இலங்கையர்கள் குறிப்பிட்ட அளவிலான உளவள சவால்களையும் சந்திக்கின்றனர். LGBTI இலங்கையர்கள் குறிப்பாக இளைஞர்கள் மற்றும் திருநர்கள் தாம் தற்கொலை எண்ணம் கொள்வதாக கூறியுள்ளனர், மற்றும் பொதுவான சனத்தொகையினரை விட அதிகமான தற்கொலை முயற்சி வீதம் LGBTI நபர்களிடையே காணப்படுகின்றது. இவ்வாறிருக்கும் போதிலும் நாடுபூராகவும் LGBTI நபர்களை மற்றும் அவர்களின் தேவைகளை புரிந்துகொண்ட மற்றும் விழிப்புணர்வுடனான உளவள ஆலோசனை மற்றும் உளவள ஆரோக்கிய சேவைகளில் குறைபாடு காணப்படுகின்றது.

- இலங்கை குறைவான எச்.ஐ.வி பரவல் வீதத்தை கொண்டுள்ளது அத்துடன் இந்த வீதம் நிலையாகவே இருந்து வந்துள்ளது. இது தேசிய எச்.ஐ.வி தடுப்பு சேவைகளை LGBTI நபர்களை இலக்காக கொண்டு நடத்தப்படுகின்றது, ஏனெனில் அவர்கள் சனத்தொகையில் எச்.ஐ.வி பரவக்கூடிய முக்கிய சமூகமாக காணப்படுகின்றனர். எனினும் இந்த இலக்காக கொள்ளல் தொடர்ச்சியற்றதாக காணப்படலாம் மற்றும் இது கிராமப்புறங்களில் மற்றும் நகரத்திற்கு வெளியே, விசேடமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் LGBTI நபர்களை விட நகரத்தில் வாழுவோரையே சென்றடைகின்றது.

- திருநம்பிகள் (பெண் - ஆண்) அதிகமாக எச்.ஐ.வி விழிப்புணர்வு நிகழ்வுகளில் உள்ளடக்கப்படுவதில்லை, ஏனெனில் எச்.ஐ.வி சேவை வழங்குநர்களால், அதிகமாக திருநங்கைகளே (ஆண் - பெண்) ஆண்களுடன் உறவு கொள்ளும் ஆண்களாக வகைப்படுத்தப் படுகின்றனர்.

### உள்நாட்டு முன்னேற்றங்கள்

- இலங்கையைச் சேர்ந்த LGBTI நிறுவனங்கள் இந்த பிரச்சனைகளையும் குறைகளையும் சுகாதார சேவை அதிகாரிகளுக்கு மற்றும் நிலையங்களுக்கு மீண்டும் மீண்டும் தெரியப்படுத்தி உள்ளனர்.இவற்றில் ஒரு சில நடவடிக்கைகள் வெற்றி கண்ட போதிலும், அவை சில சமயங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன (உதாரணமாக ஒரு குறிப்பிட்ட வைத்தியசாலையில் உள்ள மருத்துவர்களை LGBTI நபர்கள் குறித்து புரிந்துணர்வுடன் நடந்துகொள்ளச் செய்தல்). பாரபட்சம் மற்றும் துன்புறுத்தலை தடுக்க சுகாதாரத்துறையில் முழுமையான மற்றும் விரிவான சீர்த்திருத்தங்கள் அமுல்படுத்தப்படவில்லை.

### சர்வதேச முன்னேற்றங்கள்

- LGBTI நபர்களின் சுகாதார தேவைகள் தனித்துவமானவையாக இருக்கக்கூடுமென்றும் அத்துடன் சுகாதார துறை அதிகமான சந்தர்ப்பங்களில் இந்த தேவைகளை சந்திக்கத்தவருகின்றன அல்லது LGBTI நபர்களை புரிந்துணர்வுடன் நடத்தத் தவறுகின்றன, என சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட அளவான நாடுகள் பாலியல் சுகாதார சேவைகள் போன்ற LGBTI நபர்களுக்கான விசேட சேவைகளை வழங்குகின்றன. அத்துடன் LGBTI நபர்களை சரியாக புரிந்துணர்வுடன் நடத்தும் வகையில் தம் ஊழியர்களையும் பயிற்றுவித்துள்ளன. பெண்கள், வயதானோரை நடத்த பயிற்றுவிப்பது போன்ற பயிற்சிகள்.

### பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பரிந்துரைகள்:

- சுகாதார அமைச்சு மற்றும் LGBTI நிறுவனங்களுடன் இணைந்து, LGBTI இலங்கையர்களுக்கு சுகாதார சேவைகளை வழங்க பூரணமானதொரு சுகாதார செயலதிட்டத்தை உருவாக்குதல்.
- LGBTI நபர்களுக்கு சிகிச்சை வழங்கும் போது பின்பற்ற வேண்டிய விடயங்கள், சேவைபெறுவோரின் இரகசியத்தன்மையையும் அந்தரங்கத்தையும் பாதுகாத்தல் மற்றும் பாரபட்சம் மற்றும் துன்புறுத்தலை தவித்தல் உள்ளடக்கிய பூரணமான வழிகாட்டிகளை உருவாக்கி நாடுபூராகவுமுள்ள சுகாதார சேவை நிலையங்கள் மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு வழங்க சுகாதார அமைச்சிடம் பரிந்துரை செய்தல்.
- தேசிய எய்ட்ஸ் குழு போன்ற, தேசிய சுகாதார ஆலோசனை குழுக்களில் LGBTI சமூகத்தின் பிரதிநிதித்துவத்திற்காக பரிந்துரைகளை செய்தல்.
- LGBTI இலங்கையர்களுக்கு அரச சுகாதார சேவையில் காணப்படும் சேவைகள் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்த, குறிப்பாக நகர்ப்புறமல்லாத பகுதிகளில் வாழும் இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த பரிந்துரை செய்தல்.
- நகர்ப்புறங்களுக்கு வெளியே வாழும், குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் LGBTI இலங்கையர்களுக்கான சுகாதார சேவைகளை விரிவு படுத்த பரிந்துரை செய்தல் (எச்.ஐ.வி தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான சேவைகள்.
- LGBTI இலங்கையர்களுக்கு அவர்களின் குடும்பத்தினருக்கும் உளவள ஆலோசனை மற்றும் உளச்சுகாதார சேவைகளை வழங்கும் திட்டங்களை பலப்படுத்த பரிந்துரை செய்தல்.

## F. மாற்றத்துக்காக செய்யப்படும் சிகிச்சைகள் (Conversion therapy)

**பிரச்சனை:** LGBTI நபர்களை மாற்ற எண்ணி செய்யப்படும் மாற்றத்துக்கான சிகிச்சைகள் LGBTI நபர்களுக்கு பெரிய அளவிலான மன மற்றும் உடல் சோர்வையும் அழுத்தத்தையும் ஏற்படுத்தி அவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் ஏமாற்றுகின்றது.

**தற்போதைய நிலை:**

- LGBTI நபர்களை, தன்பாலீர்ப்பிலிருந்து அல்லது இருபாலீர்ப்பிலிருந்து எதிர்பாலீர்ப்புடையோராக (அல்லது திருநரிலிருந்து சிஸ்ஜெண்டர் நபர்களாக) மாற்ற செய்யும் உளவியல் அல்லது ஆன்மீக தலையீடு கொண்ட நடைமுறையாகும். இந்த சிகிச்சைகள் விஞ்ஞான அடிப்படையற்றவையாகும். இந்த மாற்றத்துக்கான சிகிச்சைகள் இலங்கையில் மருத்துவ அல்லது மத நிறுவனங்களினால் வழங்கப்படுகின்றன மற்றும் சில தனியார் மருத்துவ நிபுணர்களும் இதனை வழங்குகின்றனர்.
- ஒரு நபரின் பாலியல் ஈர்ப்பு அல்லது பால்நிலை அடையாளத்தை மாற்ற முடியும் என்பதற்கு விஞ்ஞான விளக்கங்கள் மற்றும் ஆதாரங்கள் காணப்படவில்லை. முன்னணி நிறுவனங்களான உலக சுகாதார ஸ்தாபனம், அமெரிக்க உளவள நிபுணர்கள் சங்கம் மற்றும் அண்மையில் இலங்கை உளவள நிபுணர்களின் கல்லூரி போன்றவை அனைத்தும், தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், தன்பாலீர்ப்புள்ள பெண்கள், இருபாலீர்ப்புள்ளோர் மற்றும் திருநர் உட்பட பல்வகையான பாலியல் ஈர்ப்புகள் மற்றும் பால்நிலை அடையாளங்கள் மனநோய் அல்லவென அங்கீகரித்துள்ளனர்.
- இலங்கையில் இவ்வாறான மாற்றத்துக்கான சிகிச்சைகள் பத்திரிக்கைகளிலும், வேறு ஊடகங்களிலும் விளம்பரப்படுத்தப்படுகின்றன. இவ்வாறான சேவைகள் எவ்விதத்திலும் கட்டுப்படுத்தப்படாமல், எவ்வித அரச அனுமதியோ மேற்பார்வையோ இன்றி செய்யப்படுகின்றன. தன்பாலீர்ப்புள்ள பாலியல் செயற்பாடுகள் குற்றமாக்கப்பட்டுள்ளதனால் இவ்வாறான சேவைகள் சுயாதீனமாக இயங்கி வருகின்றன.
- மாற்றத்துக்கான சிகிச்சை செய்ய பயன்படுத்தும் முறைகள் வேறுபடுவதுடன் வலுக்கட்டாயமான மனநல ஆலோசனை, LGBTI அடையாளத்தை குணப்படுத்தக்கூடிய மருந்துகளை வழங்கள் மற்றும் மின்சார சிகிச்சைகளை வழங்குதல் போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளன.
- மாற்றத்துக்கான சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் நபர்களுக்கு அது குறிப்பான மற்றும் நிரந்தரமான அழுத்தத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தும். ஏனெனில் இந்த சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் முறைகள் வேறுபடுகின்றன மற்றும் சமூகத்தில் LGBTI நபர்களுக்கெதிராக காணப்படும் தப்பெண்ணங்களினால் ஏற்படும் உளவியல் அழுத்தம் இனம்காணப்பட்டு சரி செய்யப்படாதிருக்கின்றன.
- LGBTI இலங்கையர்கள் அநேகமான எல்லாவேலைகளிலும் தம் குடும்பத்தாரால் மற்றும் சேவை வழங்குநர்களினால், வலுக்கட்டாயமான மாற்றத்துக்கான சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்றனர். ஒரு சிகிச்சை முறையை ஆரம்பித்த பின் அதை நிறுத்த அவர்கள் சம்மதம் வழங்க முடியாது அத்துடன் வதிவிட மாற்றத்துக்கான சிகிச்சை பெற்றுக்கொள்வோரால் அவ்விடத்தை விட்டு தப்பிச் செல்லவும் முடியாது.

**உள்நாட்டு முன்னேற்றங்கள்**

- இலங்கையை சேர்ந்த LGBTI நிறுவனங்கள் பரவலாக வரும் மாற்றத்துக்கான சிகிச்சை சேவைகள் குறித்து அதிகமாக வலியுறுத்தி வந்துள்ளனர்.
- 2018ம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கை உளவள நிபுணர்களின் கல்லூரி, தன்பாலீர்ப்புடைய ஆண்கள் தன்பாலீர்ப்புடைய பெண்கள், இருபாலீர்ப்புடையோர், திருநர்கள் உட்பட, எதிர்பாலீர்ப்பு அல்லாத ஏனைய பாலியல் ஈர்ப்புகள் மற்றும் பல்வகையான பால்நிலை அடையாளங்கள் மனநோய் அல்லவென அறிவித்தது. ஆகவே LGBTI இலங்கையர்கள் தம் அடையாளத்தை மாற்ற சிகிச்சைகள் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

## சர்வதேச முன்னேற்றங்கள்

- மாற்றத்துக்கான சிகிச்சை சேவைகள் சித்திரவதை, கொடூரம் நிறைந்த, மனிதநேயமற்ற மற்றும் அவமானப்படுத்தும் தண்டனைகளை உள்ளடக்கியுள்ளன என சர்வதேச ரீதியில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் கட்டாயப்படுத்தப்பட்ட வதிவிட சிகிச்சைகள் ஒருவரின், தன்னிச்சையான தடுப்புக்காவலில் இருந்து உள்ள சுதந்திரத்தை மீறும் செயலாகும்.
- ஆர்ஜன்டீனா, பிரேசில், மால்டா, ஏகுவடோர், தாய்வான் மற்றும் கனடாவின் மாநிலங்கள், ஸ்பெயின் மற்றும் ஐக்கிய அமெரிக்க இராஜ்ஜியம் உட்பட அநேகமான நாடுகள் மாற்றத்துக்கான சிகிச்சையை தடை செய்துள்ளன.
- அதிக எண்ணிக்கையிலான பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் சுகாதார நிறுவனங்கள், மாற்றத்துக்கான சிகிச்சை குறித்து கண்டனம் தெரிவிப்பதுடன், அதை தடை செய்யுமாறும் கோருகின்றனர்.

**பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பரிந்துரைகள்:**

- இலங்கையில் மாற்றத்துக்கான சிகிச்சையை தடை செய்யும் பிரேரணைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் அப்பிரேரணைகளை ஆதரித்தல்.
- மாற்றத்துக்கான சிகிச்சை வழங்கும் நிலையங்களை இனம்கண்டு அவற்றை மூடுவதற்காக, சுகாதார அமைச்சு வழிகாட்டிகளை உருவாக்க பரிந்துரை செய்தல்.
- மாற்றத்துக்கான சிகிச்சை வழங்குவதை நிறுத்த, அனைத்து உளவள நிபுணர்கள் மற்றும் உளநல மருத்துவ நிபுணர்களுக்கும், வழிகாட்டிகளை வழங்க பரிந்துரை செய்தல்

Women and Media Collective
Established 1984

Women and Media Collective
56/1, Sarasavi Lane, Castle Street,
Colombo 08, Sri Lanka.
Email: wmcsrilanka@womenandmedia.org
Web: womenandmedia.org
Facebook: https://www.facebook.com/womenandmediacollective
Twitter: https://twitter.com/womenandmedia